அளவுக்கு இந்தியத் தூதரும் அந்த நிறுவனத்தினரும் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். இப்போது அந்தச் சிலை பாதுகாப்பாக லண்டனில் வைக்கப்பட்டிருக்கிறது. பழுது பார்க்க அனுப்பப்பட்ட இடத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. ஏற்படுத்தப் பட்ட உடன்பாட்டின்படி 'நார்ட்டன் சைமன் பவுன்டேஷன்' பத்தாண்டு காலத்திற்கு அதை பல்வேறு பொருட்காட்சி சாலை களில் வைத்துவிட்டுத்தான் அனுப்புவார்கள். பத்தாண்டு காலத் திற்குப் பிறகு அது இங்கு வந்து சேரும். அது வந்தால் உரிய முறையில் தமிழகத்திற்குத்தான் வந்து சேர வேண்டும். டில்லி யிலே வைத்துக்கொள்ளக்கூடிய சூழ்நிலை ஏற்படாது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: சிவபுரம் நடராஜர் சிலை வழக்கில் இலண்டன் நீதிபதி இந்தச் சிலை யாருக்கு உரிமை உள்ளது என்பதை நிரூபிக்கும் வகையில் தேவையான ஆதாரங்களைத் தாக்கல் செய்யக் கோரியுள்ளாரே, இந்த அரசாங்கம் தேடிக் கண்டு பிடித்துக் கொடுத்ததா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த அளவில் முழு ஆவணங்களையும், முழு விவரங்களையும் மத்திய சர்க்காருக்கு அனுப்பி மத்திய சர்க்கார் அதை வைத்துத்தான் வழக்குப் பதிவு செய்தார்கள். நாம் தொடுத்த வழக்கிற்கும் கூட நீதிமன்றத்தில் சிலை தேவைப்படு கிறது. சிலையைக் கொடுங்கள், திருப்பித் தந்து விடுகிறோம் என்று எழுதியிருக்கிறோம்; அது பற்றி அவர்களைக் கேட்டுத்தான் முடிவு செய்ய வேண்டுமென்று மத்திய சர்க்கார் சொல்லியிருக் கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி எண்கள் 255, 256, 257, 258, 259 ஆகியவை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகின்றன.

Auction of elephants at Theppakadu.

* 265. *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state·

(*a*) whether an auction sale of elephants was conducted by the Forest Department on 19th March 1975 at Theppakadu near Ootacamund; and

(*b*) if so, the details of the same?

1975 நவம்பர் 10]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) ஆம்.

(இ) 19—3—75 அன்று தெப்பக்காடு யானை வளர்ப்பகத்தில் நடத்தப்பட்ட பொது ஏலத்தில் 1 ஆண்டு முதல் 19 ஆண்டு வயது வரையுள்ள பதினேரு யானைகள் விற்கப்பட்டன. ஏல விற்பனையில் கிடைத்த மொத்தத் தொகை ரூ. 1,60,600.

திரு. என். கே. பழனிசாமி: எல்லாப் பொருள்களின் விலையும் ஏறிக் கொண்டே போக யானை விலை மட்டும் குறைந்து கொண்டே போகக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: ஒவ்வொரு ஆண்டும் விலை கூடுவதாகத்தான் இருக்கிறதே தவிர, விலை குறைவதாகக் கணக்கு இல்லை. பொது ஏலத்தில் விடும்போது, மார்க்கட் ரேட் குறிப்பிட்டு, அதற்கு மேல்தான் விற்க வேண்டுமென்று விலை நிர்ணயிக்கப்படுகிறது.

முதலைப் பண்ணை.

*266 **வினு—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் முதலைப் பண்ணை ஒன்று அமைத்திட உத்தேசிக்கப்பட்டு உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) ஆம்.

(இ) திருச்சி மாவட்டம் திருவரங்கத்திற்கருகே கொள்ளிடக் கரையோரமாக அமைந்துள்ள கிளிக்கூடு கிராமத்தில் உள்ள குட்டையில் முதலைப் பண்ணை ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். கிட்டப்பா: இந்த முதலைகளில் மூன்று வகை முதலைகள், காரியாறு முதலை, உப்பினியாறு, மக்கர் முதலை என்று மூன்று வகை முதலைகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதில் எந்த வகை முதலைக்குத் தமிழ்நாட்டில் பண்ணை ஏற்படுத்தப்பட இருக்கிறது? கொள்ளிடம் மேற்கில் முதலைப் பண்ணை அமைக்கப்பட இருக்கிறது என்று கூறியிருக்கிருர்கள். சிதம்பரத்தில் உள்ள கொள்ளிடம் பகுதியில் நிறைய முதலைகள்